தமிழக சட்டப் பேரவை.

[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் நான்காவது சட்டப் பேரவையின் மூன்ருவது கூட்டத் தொடர்.]

திங்கட்கிழமை, 1968 பிப்ரவரி 12

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனுர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

(i) திரு. பி. துரைசாமி ரெட்டியார், (ii) திரு. எம். ஜெங்கல் ரெட்டியார்—முன்னுள் உறுப்பினர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1957-லிருந்து 1962-வது ஆண்டுவரை ஆரணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் முன்னுள் உறுப்பினரான திரு. பி. துரைசாமி ரெட்டியார் அவர்கள் 12—10—1967 அன்று மறைந்து விட்டதைக் குறித்தும்,

1957-லிருந்து 1962-வது ஆண்டுவரை செஞ்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டுச் சட்டப்பேரவையின் முன்னுள் உறுப்பினராகவும், 1966-லிருந்து சட்டமன்ற மேலவையின் தென்னுற்காடு மாவட்ட உள்ளாட்சித் தொகுதியின் சார்பில் உறுப்பினராகவும் இருந்துவந்த திரு. எம். ஜெங்கல் ரெட்டியார் அவர்கள் 9—2—1968 அன்று காலமானதைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்த குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்ருர்கள்.

2. விளுக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட விளுக்கள்.

Shift system in Queen Mary's College

*1 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether shift system has been introduced in the P.U.C. in Queen Mary's College, Madras, from this year; and

(b) if so, the additional number of students admitted?